விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 067 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 12 வெள்ளிக்கிழமை (24.02.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

## நம்பகமான நிதி உத்தரவாதம் இலங்கைக்கு மிகவும் அவசியம்

### அமெரிக்கா தெரிவிப்பு



(பெங்களூரு)

இலங்கைக்கான நம்பகமான நிதி உத்தரவாதம் மிகவும் அவசியம் என அமெரிக்காவின் திறைசேரி செயலாளர் யனெட் யெலென் தெரிவித்துள்ளார்

இந்தியாவின் பெங்களூருவில் நேற்று வியாழக்கிழமை ஆரம்பமான ▶11

## தேர்தல் நடத்த நிதி இல்லை

### பாராளுமன்றில் ஜனாதிபதி ரணில்



(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு போதுமான நிதி அரசாங்கத்திடம் இல்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

(11ஆம் பக்கம் பார்க்க)

தேர்தலை ஒத்திவைக்கக்கோரி

## தாக்கல் செய்த மனு மீண்டும் ஒத்திவைப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையை உயர் நீதிமன்றம் ஒத்திவைத்து உத்தரவிட்டுள்ளது.

அதன்படி குறித்த ▶11

மரண தண்டனை

## ஆவணத்தில் ஒப்பமிடேன்

### ரணில் தீர்மானம்

(கொழும்பு)

இலங்கையிலுள்ள எந்தவொரு நீதிமன்றமும் பிரதிவாதிகளுக்கு விதிக்கப்பட்ட மரண தண் ▶11

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

# ஜனநாயகத்தை சீர்குலைக்கிறார்

### யாழில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(மானிப்பாய்)

தேர்தலை ஒத்திவைத்து ஜனாதிபதி ரணில் ஜனநாயகத்தை சீர்குலைக்கிறார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். (11ஆம் பக்கம் பார்க்க)

## கல்வி அமைச்சுக்குள் நுழைய முற்பட்ட

### பிக்குகள் உட்பட 57 பேர் கைது

(கொழும்பு)

பத்தரமுல்லையில் உள்ள கல்வி அமைச்சுக்குள், பலவந்தமாக நுழைய முயற்சித்த பௌத்த பிக்குகள், அனைத்துப் ▶11

## அரச அதிகாரிகளுக்கு ஜனாதிபதியின் அறிவிப்பு

(கொழும்பு)

அரச அதிகாரிகளுக்கு புதிய அறிவித்தல் ஒன்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ளார்.

வெளிநாட்டு பயணங்களுக்கான விமானப் பயணச் சீட்டுக்களை கொள்வனவு செய்வதற்கு, அரசாங்கத்தின் நிதியைப் பயன்படுத்தும் நடைமுறை குறித்து இந்த அறிவித்தல் விடுக் ▶12

## பிரபாகரனை மறக்கமாட்டோம்; முட்டாளாக இருக்காதீர்கள்

### பாராளுமன்றில் சிறீதரன் ஆவேசம்



(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை நாங்கள் வாழ்நாள் முழுவதும் மறக்கமாட்டோம்.

படித்தவர் நீங்கள், முட்டாள்களாக இருக்காதீர் ▶11

## தேர்தல் ஆணைக்குழுவுக்கு ரூ.500 காசுக் கட்டளை

### யாழ்.இளைஞனால் அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் இலங்கை தேர்தல் ஆணைக்குழுவுக்கு 500 ரூபாய் காசுக் கட்டளை அனுப்பியுள்ளார்.

தேர்தலை நடத்த நிதியில்லை என ஜனாதிபதி பாராளுமன்றில் கூறியுள்ள நிலையில், ▶11

சீனாவின் உத்தரவாதமின்றி

## இலங்கைக்கான கடனை விடுவிக்க முடியாது – ஐ.எம்.எவ்

(கொழும்பு)

இலங்கைக்கு கடன் வழங்குவதற்காக முன்வந்த நிபந்தனைகளை சர்வதேச நாணய நிதியம் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

சீனாவின் கடன் உறுதிப்பத்திரம் இன்றி இலங்கைக்கான கடனை விடுவிக்க முடியாது என ▶12

## உள்ளூராட்சி தேர்தல் தொடர்பில் இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ள

### தேர்தல்கள் ஆணைக்குழு இன்று கூடுகின்றது

(கொழும்பு)

அரசியலமைப்பு மற்றும் தேர்தல் சட்டத்திற்கு அமைய சட்டப் ரீதியாகவே உள்ளூராட்சி மன்ற தேர்தல் அறிவிக்கப்பட்டதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் அனைத்து உறுப்பினர்களின ▶11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பொலிஸார் துப்பாக்கிச்சூடு சந்தேக நபர் உயிரிழப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்க மடவல பிரதேசத்தில் பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் பொலிஸ் காவலில் இருந்த 30 வயதுடைய சந்தேக நபர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

கொலை சம்பவங்கள் மற்றும் குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கட்டுநாயக்க பொலிஸார் குறித்த நபரை மாத்தறையில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

பின்னர், அவர் மறைத்து வைத்திருந்த ஆயுதங்களை கண்டுபிடிக்க நேற்றுக் காலை 6 மணியளவில் கட்டுநாயக்க மடவளை பகுதியில் உள்ள மாதுவ சதுப்பு நிலத்திற்கு சந்தேக நபரை அழைத்து வந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

அங்கு புதைத்து வைக்கப்பட்டிருந்த கைக்குண்டு மற்றும் கைத்துப்பாக்கியை மீட்கும் போது, சந்தேக நபர் பொலிஸ் அதிகாரிகள் மீது கைக்குண்டை வீச முற்பட்ட நிலையில் பொலிஸார் அவர் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

# நெல் அறுவடையை அதிகரிக்க திட்டம்

(கொழும்பு)

இலங்கையின் வருடாந்த நெல் அறுவடையை அதிகரிக்கும் நோக்குடன், எதிர்வரும் 10 வருடங்களுக்குள் ஒரு ஹெக்டயரில் இருந்து பெறும் நெல் அறுவடையை 5.5 மெட்ரிக் தொன் வரை அதிகரிக்க விவசாயத் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

இதற்கமைய, 3 வருடங்களுக்குள் 4.7 மெட்ரிக் தொன் வரையும், 5 வருடங்களுக்குள் 5.1 மெட்ரிக் தொன் வரையிலும், 10 வருடங்களுக்குள் 5.5 மெட்ரிக் தொன் வரையிலும் நெல் அறுவடையை அதிகரிக்கும் நோக்கில் வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மாலனீ பரசுராமன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நெற்செய்கையை அதிகரிக்கும் நோக்குடன், நெற்செய்கை தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டுள்ள அனைத்து தரப்பினருடனும் இணைந்து விவசாயத் திணைக்களம் வேலைத் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

தற்போது ஒரு ஹெக்டயரில் இருந்து 3.5 மெட்ரிக் தொன் நெல் அறுவடை செய்யப்படுகிறது.

அதன்படி, விதை உற்பத்தி, மண் பரிசோதனை, கரிம மற்றும் இரசாயன உரங்களைப் பயன்படுத்துவது, நெற்செய்கைக்கு புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தல், சந்தைப்படுத்தல், பராமரித்தல் மற்றும் கிருமிநாசினிகளின் பயன்பாடு போன்றவற்றை கவனத்திற்கொண்டு நாட்டின் நெல் உற்பத்தியை அதிகரிக்க கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# யாழில் இரு பாடசாலைகளுக்கும் பேருந்து வழங்க நடவடிக்கை

## கலாநிதி ஆறு திருமுருகனிடம் எதிர்க்கட்சித் தலைவர் உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள இரண்டு பெண்கள் பாடசாலைகளுக்கு பேருந்து வழங்குவதாக எதிர்க்கட்சித் தலைவர் உறுதி அளித்ததாக அகில இலங்கை இந்து மா மன்றத்தின் உப தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் தெரிவித்தார்.

நல்லை ஆதீனத்தில் நேற்று இடம்பெற்ற எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடனான சந்திப்பின்பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இன்று (நேற்று) நல்லை ஆதீனத்திற்கு வருகை தந்தார். ஆதீன சுவாமிகளுடன் அகில இலங்கை இந்து மா மன்றத்தின் சார்பில் நானும் அவருடன் கலந்துரையாடினோம்.

அவரிடம் மிக முக்கியமாக நாம் விடுத்த வேண்டுகோள் கீரிமலை காங்கேசன் துறை வீதியில் இருக்கின்ற ஜனாதிபதி மாளிகைக்கு அருகில் இருக்கின்ற கோயில்கள் இன்னும் விடுவிக்கப்படவில்லை. அதை விடுவிக்கின்ற முயற்சியினை நீங்கள் பாராளுமன்றத்தில் முன்னெடுக்க வேண்டும்.

அதேபோல தல்செவன விடுதிக்கென பயன்படுத்தப்படுகின்ற 200 வருடம் பழமை வாய்ந்த திருகோணசத்திரம் என்கின்ற சிவபூமி அறக்கட்டளைக்குரிய அந்த நிலத்தினை விடுவிக்க வேண்டும்.

மேலும் ஒரு கோரிக்கையினை முன்வைத்திருந்தோம், ஏற்கனவே எதிர்க்கட்சித் தலைவரால் நாட்டில்சில பாடசாலைகளுக்கு பேருந்து வண்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, இராமநாதன் இந்து கல்லூரி ஆகிய இரண்டு பாடசாலைகளும் பேருந்துகள் இல்லாமல் இருக்கின்றன. அவர்களுக்கு பேருந்து வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தோம். அதற்கு அவர் அது வழங்க முடியும் நான் அதனை பரிசீலித்து விரைவில் வழங்குவதற்குரிய நடவடிக்கை எடுக்கின்றேன் எனத் தெரிவித்தார். (ம-7,33,104)

# ஊடகங்களை சந்திக்க யாழ் வரவில்லை - சஜித்

(யாழ்ப்பாணம்)

ஊடகங்களின் கேள்விகளுக்கு பதில் அளிக்க முடியாது விரும்பின் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள தேர்தல் பிரச்சாரங்களில் உரையாற்றும் போது செய்தி சேகரியுங்கள் என எதிர்க்கட்சித் தலைவர் கூறியுள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு பயணம் மேற்கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச யாழ்.மறைமாவட்ட ஆயர் மற்றும் நல்லை ஆதீன குரு முதல்வர் ஆகியோரை நேற்று வியாழக்கிழமை சந்தித்தார்.

குறித்த சந்திப்புக்கள் தொடர்பில் ஊடகவியலாளர்கள் எதிர்க்கட்சித் தலைவரிடம் வினாவ முற்பட்ட போது, தாம் ஊடகங்களை சந்திக்க வரவில்லை. ஊடகங்களின் கேள்விகளுக்கு பதில் அளிக்க முடியாது.

விரும்பின் யாழில் நடைபெறும் தேர்தல் கூட்டங்களில் உரையாற்றுவேன், அங்கு வந்து செய்திகளை சேகரியுங்கள் என கூறி அவ்விடத்தில் இருந்து சென்றார். (ம-7)


# மரண அறிவித்தல்

## திரு. தெய்வதவபாலன் திலீபன்



மலர்வு 04 . 11 . 1964

உதிர்வு 23 . 02 . 2023

செட்டிகுறிச்சி சங்கானை மேற்கு, பண்டத்தரிப்பினை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திரு.தெய்வதவபாலன் திலீபன் நேற்று (23.02.2023) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் கலஞ்சென்றவர்களான சின்னப்பா தெய்வதவபாலன் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மூத்த மகனும், தெய்வசக்தி (ஆசிரியை - யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி), சுதர்சனா, யாதவன் (பிரான்ஸ்), யமுனா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், மதிவண்ணன், சம்சா, வில்வநாதன் மற்றும் காலஞ்சென்ற ஜெயபால சிங்கத்தின் மச்சானும், தனுஷன், நிதர்ஷன், ஜனார்த்தனி, தரண்யா, தனுகரன், அபர்ணா, அபிமன்யு மற்றும் உமாகரனின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2023) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் செட்டியார் மடச்சந்தியில் உள்ள சகோதரி சுதர்சனா - வில்வநாதன் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செட்டியார் மடச்சந்தி,
அராலி வடக்கு, வட்டுக்கோட்டை. (C-6043)

தகவல்:
குடும்பத்தினர்.



# சுற்றுலா விசா சம்பந்தமான ஆலோசனைகள்

கனடா, அவுஸ்திரேலியா, ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுலா விசாவும் மற்றும் சகல நாடுகளுக்குமான Student Visa வும் தேவைப்படுபவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

**Hybrid International Hub (pvt) LTD** (C-6040)

**076 250 0098 / 021 222 1265**



# பதவி வெற்றிடம்

யாழ் மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் காரியாலய உதவியாளர் பதவிக்கு யாழ் மாநகர எல்லைக்குட்பட்டவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பெயர், முகவரி, கல்வித் தகைமை, அனுபவம், தொலைபேசி இலக்கம் அடங்கிய பூரணமான விண்ணப்பத்தை 10.03.2023ஆம் திகதிக்கு முன்னதாக **"யாழ் மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம், இல. 100, பிரதானவீதி, யாழ்ப்பாணம்"** என்னும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கவும். ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும் ஓய்வு பெற்றோர் விரும்பப்படுவர்.

தலைவர்
யாழ்.மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர்
கூட்டுறவு சங்கம் யாழ்ப்பாணம்.

24.02.2023 (C-6038)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று வியாழக்கிழமை காலை நல்லை ஆதீன குருமுதல்வர் சோமசுந்தர ஞானதேசிக பரமாச்சார்ய சுவாமிகள், கலாநிதி ஆறு. திருமுருகன் மற்றும் யாழ்.மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை ஆகியோரை சந்தித்து கலந்துரையாடினார். (படம் - சிவசாந்தன்,கஜிந்தன்)

### வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பில்

# பணம் வைப்பிலிடுமாறு கோரினால் அவதானத்துடன் செயற்படுங்கள்

### இலங்கை மத்திய வங்கி எச்சரிக்கை

(கொழும்பு)

**வெளிநாட்டில் தொழில் பெற்று தருவதாகக் கூறி பணம் வைப்பிலிடுமாறு கோரினால் அவதானமாக இருக்குமாறு இலங்கை மத்திய வங்கி எச்சரிக்கை விடுத்துள்ளது.**

இவ்வாறு கோருவது மோசடியாக இருக்கக் கூடும் எனவும் முறையான ஆய்வுகள் இன்றி பணத்தை வைப்புச் செய்வதை தவிர்க்குமாறு இலங்கை மத்திய வங்கியின் நிதிப் புலனாய்வுப் பிரிவு பொது மக்களை எச்சரித்துள்ளது.

இதேவேளை, நீங்கள் இவ்வாறான மோசடிக்கு ஆளாகியிருந்தால் அல்லது இவ்வாறான மோசடி தொடர்பில் ஏதேனும் தகவல் தெரிந்தால் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு அல்லது இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக த்திற்கு அறிவிக்குமாறும் மேலும் ஏற்கனவே பணம் வைப்பிலிட்டிருந்தால் அந்த நிறுவனம் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்துடன் இணைந்துள்ளதா என ஆராயுமாறு மத்திய வங்கி கோரிக்கை விடுத்துள்ளது. (நி)



பூமணி அம்மா அறக்கட்டளையினரால் லண்டனைச் சேர்ந்த செல்வி லைலா துசியனின் பிறந்தநாளை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

# நடைபெறாத தேர்தலை எவ்வாறு பிற்போடுவது

### ஜனாதிபதி கேள்வி



(கொழும்பு)

நடைபெறாத தேர்தலை எவ்வாறு பிற்போடுவது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

பாராளுமன்றில் நேற்று வியாழக்கிழமை விசேட உரையாற்றிய அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போதைய சூழ்நிலையில் தேர்தலொன்றை நடத்துவதற்கு நாட்டின் பொருளாதாரம் சீராக இல்லை.

தேர்தலுக்கான நிதி இல்லையென கடந்த டிசெம்பர் 14 ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டது.

இன்று அத்தியாவசிய சேவைகள் தொடர்பில் வாக்களிப்புக்கு செல்வதாக எதிர்க் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

ஏன் இவ்வாறு செய்கிறீர்கள், மக்களுக்கு பிரச்சினையின்றி தொடர்ந்து மின்சாரம் வழங்குவது தான் உங்களுக்கு பிரச்சினையா? எனவும் ஜனாதிபதி கேள்வி எழுப்பியுள்ளார்.(நி)

# முட்டைக்கான வரி குறைப்பு

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் முட்டைகளுக்கு விதிக்கப்பட்டிருந்த விசேட சரக்கு வரி குறைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மூன்று மாத காலத்திற்கு வர்த்தக வரி 50 ரூபாவிலிருந்து இருந்து 1 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது.

சந்தையில் முட்டை விலையை கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு குறிப்பிட்டுள்ளது. (நி)

# ஜனாதிபதித் தேர்தலை நடத்தவே உள்ளூராட்சி தேர்தல் ஒத்திவைப்பு

### உதயகம்மன்பில சாடல்



(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தோல்வி ஏற்பட்டால் அது ஜனாதிபதித் தேர்தலிலும் தாக்கம் செலுத்தும். எனவேதான் ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்த ரணில் விக்கிரமசிங்க முற்படுகின்றார்.

இதன் காரணமாக ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் வரை வேறு எந்த வாக்கெடுப்பையும் நடத்துவது மோசமானது என அவர் நினைக்கின்றார் என பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது.

தேர்தலைப் பிற்போடுவதற்கு அரச அச்சக அதிகாரி மீது சில எதிர்க்கட்சி அரசியல் வாதிகள் குற்றம் சுமத்துகின்றனர். ஏனையோர் திறைசேரி செயலாளரைக் குற்றம் சாட்டுகிறார்கள். தேர்தல் ஆணையத்தை விமர்சிப்பவர்களும் உள்ளனர்.

ஆனால், அரச அதிகாரிகளைக் குறை சொல்வதில் எந்தப் பயனும் இல்லை. அவர்கள் சுற்றறிக்கைகள், அமைச்சரவை முடிவுகள் மற்றும் அமைச்சரின் உத்தரவுகளின் படி செயற்படுவதற்கு சட்டத்தால் கட்டுப்பட்டவர்கள்.

அதேவேளை, எதிர்வரும் நவம்பர் மாதம் 18 ஆம் திகதியளவில், ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படும் என்ற நம்பிக்கையில், உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஜனாதிபதி ஒத்திவைப்பதாகச் சிலர் கருதுகின்றனர் என அவர் தெரிவித்தார். (நி)

# வீதி மின் விளக்குகள் மீண்டும் அணைக்கப்படுமா?

(கொழும்பு)

வீதிகளின் இருமருங்கிலும் பொருத்தப்பட்டுள்ள வீதி விளக்குகளுக்கான மின் கட்டணங்களை, எதிர்காலத்தில் குறித்த நகர மற்றும் பிரதேச சபைகளே செலுத்த வேண்டிய நிலை ஏற்படும் என வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதுவரை குறித்த கட்டணங்களை வீதி அபிவிருத்தி அதிகார சபையே செலுத்தி வருவதாக அதன் பணிப்பாளர் நாயகம் L.V.S.வீரகோன் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘பொன் அணிகளின் போர்’ இன்று ஆரம்பமாகிறது






‘பொன் அணிகளின் போர்’ என்று வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிகளுக்கு இடையிலான பெருந் துடுப்பாட்டப் போட்டி மொபிற்றலின் அனுசரணையுடன் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இன்று மற்றும் நாளை இந்தப் போட்டி நடைபெறவுள்ளது. 1917 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பெருந் துடுப்பாட்டப் போட்டி 106 ஆவது வருடமாக நடைபெறவுள்ளது.

அத்துடன், இரு அணிகளும் மோதும் ராஜன் கதிர்காமர் வெற்றிக் கிண்ணத்துக்கான 30 ஆவது ஒரு நாள் போட்டி மார்ச் 4 ஆம் திகதியும் மூன்றாவது இருபது - 20 போட்டி மார்ச் 7 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

போட்டிகள் தொடர்பாக பங்கேற்கும் அணிகளின் அறிமுக நிகழ்வும் ஊடக சந்திப்பும் நேற்று முன்தினம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இடம்பெற்றது. இதன் போது இரண்டு அணிகளின் தலைவர்களாலும் வெற்றிக் கிண்ணம் அறிமுகப்படுத்தப்பட்டது.

குறித்த நிகழ்வில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி அதிபர் ருஷிரா குலசிங்கம், சென்.பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் ஏ.பி.திருமகன், அணி வீரர்கள், பயிற்றுவிப்பாளர்கள், அனுசரணையாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (4-6-33)

# டோனிக்கு கிடைத்த மரியாதை ஜடேஜாவுக்கும் கிடைக்கும்

## சுரேஷ் ரெய்னா

சென்னையில் எம்.எஸ். டோனிக்கு கிடைத்த அதே வரவேற்பும் புகழும் மற்றொரு வீரருக்கும் கிடைக்கப் போகிறது. அதனை இந்த சீசனிலேயே அவர் நிரூபித்துக் காட்டுவார் என சுரேஷ் ரெய்னா கூறியுள்ளார்.

2023 ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல் கிரிக்கெட் தொடர் வரும் மார்ச் 31 ஆம் திகதி முதல் தொடங்கவுள்ளது. இறுதிப் போட்டி மே 28 ஆம் திகதியன்று நடைபெறும் என பி.சி.சி.ஐ அறிவித்துள்ளது. அதன்படி போட்டி அட்டவணைகள் சமீபத்தில் வெளியாகின.

சி.எஸ்.கே அணி கப்டன் எம்.எஸ்.டோனி இந்த ஆண்டுடன் ஓய்வு பெறுவார் எனத் தெரிய வருகிறது.

இந்நிலையில் இந்தாண்டு டோனிக்கு கிடைக்கும் அதே பெருமை ஜடேஜாவுக்கும் கிடைக்கும் என சுரேஷ் ரெய்னா் கூறியுள்ளார். இது குறித்து அவர் மேலும் கூறியதாவது, ரவீந்திர ஜடேஜா பட்டிங் மற்றும் பவுலிங்கில் தனது திறமை என்ன வென்பதை நிரூபித்துக் காட்டியுள்ளார்.

டோனிக்கு மிகப் பெரிய தூணாக இருக்க முடியும் என ஜடேஜா நிரூபித்துக் காட்டியுள்ளார்.

தற்போது மன ரீதியாகவும் உடல் ரீதியாகவும் சிறந்த நிலையில் உள்ளார். சேப் பாக்கம் மைதானத்திற்குச் சென்றால் நிச்சயம் டோனிக்கு கிடைத்த மரியாதை ஜடேஜாவுக்கும் கிடைக்கும். தொடர்ந்து பேசிய அவர், ருதுராஜ் கெயிக்வாட் சென்னையில் நடக்கும் முதல் போட்டியில் விளையாடுவார். அவர் இந்த முறை நல்ல ஆட்டத்தை வெளிப்படுத்துவார் என்ற நம்பிக்கை உள்ளது. இந்த சீசன் சென்னையில் வெற்றியுடன் தொடங்கும். இரசிகர்களின் ஆசைகளை நிறைவேற்ற டோனியும் தயாராக உள்ளார் என அவர் தெரிவித்தார்.

ஐ.பி.எல் தொடரின் முதல் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் மற்றும் குஜ ராத் டைட்டன்ஸ் அணிகள் பலப் பரீட்சை நடத்துகின்றன. இந்தப் போட்டி அகமதாபாத்தில் நடைபெறவுள்ளது.(4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2712

Search for people, places and things

**சுரோஷ்**




**றவன்**




**தசாங்கன்**




**கம்ஷாலினி**




**விதுரா**




**சாமந்தி**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப் குழுவின் புதிய தலைவராக மீண்டும் ரஞ்சித் பண்டார

(கொழும்பு)

அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் புதிய தலைவராக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நேற்று பிற்பகல் நடந்த கோப் குழுவின் கூட்டத்தில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று அவர் தலைவராக தெரிவு செய்யப்பட்டதாக பாராளுமன்றத்தின் தொடர் பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதற்கு முன்னதாகவும் அவர் கோப் குழு வின் தலைவராக பதவி வகித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# மரண அறிவித்தல்



## அமரர். கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம் (சுந்தரி)

பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் வத்திராயன் தெற்கு மருதங்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம் (சுந்தரி) 22.02.2023 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஸ்ணவேணியின் அன்புக் கணவரும், ரவிச்சந்திரன், ஜெயச்சந்திரன், செல்வச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுமதி, தயாவதி, துசியந்தி ஆகியோரின் மாமனாரும், அபினேஷ், கிதுர்சன், கபிலன், மாதங்கி, மிதுர்சன், சந்தியா, கிருஜா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கிளிங்டன் மலர்ச்சாலையில் சனிக்கிழமை (25.02.2023) நண்பகல் 12 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 26.02.2023 ஞாயிற்றுக்கிழமை இறுதிக் கிரியை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப 10 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக வத்திராயன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

(14702)

தகவல்- சு.ரவிச்சந்திரன் 077 758 4402

# குறைகேள் அரங்கு



## கடல் அரிப்புக்கு உள்ளாகி வரும் நயினாதீவை பாதுகாப்பதற்கு நடவடிக்கை தேவை

தீவுப் பகுதியின் மத்திய நிலையமாகவும் சர்வமத வழிபாட்டுத் தலமாகவும் விளங்கும் நயினாதீவு அண்மைக் காலமாக வேகமாக ஏற்பட்டுவரும் கடல் அரிப்புக் காரணமாக தீவின் கரையோரப் பகுதி பாதிக்கப்பட்டு வருவதைக் காணக் கூடியதாக உள்ளது.

குறிப்பாக கடந்த பத்தாண்டுகளுக்குள் இருபது அடிக்கு மேற்பட்ட தூரம் கடல் உள்நோக்கி வந்து உள்ளது.

எதிர்காலத்தில் சூறாவளித் தாக்கம் போன்றன ஏற்படும் போது நயினாதீவு கூடுதலாக பாதிக்கப்படும் தன்மை காணப்படுகின்றது.

எனவே இது தொடர்பாக வேலணை பிரதேச சபை, வழிபாட்டுத் தலங்கள் , சமய சமூக நிறுவனங்கள்,புலம் பெயர் நாடுகளில் வாழ்ந்து வரும் ஊர் மக்கள், சன சமூக நிலையங்கள், கடற்றொழிலாளர் சங்கம், விவசாயசங்கம் என்பன பொதுவான செயற்றிட்டத்தை உருவாக்கி எம் தீவகத்தைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க முன்வருமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

இ.திரவியநாதன்

# பணம் அச்சிடுவதை நிறுத்தினால் வட்டி விகிதங்கள் மேலும் உயரும்

## பொருளாதார ஆய்வாளர்கள் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

திறைசேரியின் கோரிக்கைகளுக்கு எதிராக இலங்கை மத்திய வங்கி பணம் அச்சிடுவதை இடைநிறுத்தினால் வட்டி விகிதங்கள் மேலும் உயரும் என்று பொருளாதார ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

திறைசேரியின் நிதித் தேவைகளுக்கு ஏற்ப தேவையான தொகையை மத்திய வங்கி அச்சடித்து வழங்குவதே இதுவரை வழமையான நடைமுறையாக இருந்தது.

இந்த செயல்முறை இடைநிறுத்தப்பட்டால், திறைசேரி மாற்று நிதி ஆதாரங்களைத் தேட வேண்டியிருக்கும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

நாட்டின் பொருளாதாரம் தாங்கும் அளவிற்கு பணத்தை அச்சடிக்கும் அதிகாரத்தை மத்திய வங்கிக்கு வழங்கும் புதிய சட்டம் தொடர்பில் அமைச்சரவை கடந்த வாரம் விசேட தீர்மானமொன்றை எடுத்துள்ளது. இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த நடவடிக்கையின் மூலம், அரசாங்கம் நிதி அமைச்சிடம் எத்தனை கோரிக்கைகளை முன்வைத்தாலும் பணத்தை அச்சிடாத ஒரே அதிகாரம் மத்திய வங்கிக்கு கிடைக்கும். இலங்கையின் பொருளாதாரத்தை சீரமைக்க சர்வதேச நாணய நிதியம் வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையில் இந்த புதிய கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. (நி)

# இராசிபலன்

24.02.2023
மாசி 12, வெள்ளிக்கிழமை
சதுர்த்தி காலை 6.56 மணிவரை
பஞ்சமி பின்னிரவு 6.08 மணிவரை

ரேவதி முற்பகல் 8.48 மணிவரை
சுபநேரம் 6.30-8.00 மணிவரை
இராகுகாலம் 11.00-12.30 மணிவரை

சந்திராஷ்டமம் - உத்தரம்

வளவன்


மேஷம்

வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், போசன சுகமுண்டு, கற்பனை மிகுதியான நாள்.


கடகம்

செய்தொழில் மேன்மையுண்டு, திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், கொடுத்த வாக்கைகாப்பாற்றி மகிழ்வீர்கள், போசன சுகமுண்டு.


துலாம்

சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், செய்தொழிலில் முன்னேற்றம் காணும் நாள், காரிய அனுகூலமுண்டு, ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள்.


மகரம்

நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு,வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.


ரிஷபம்

ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்


சிம்மம்

சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், உறவினர் பகை மாறும், மறைமுகப் போட்டிகளையும் எளிதில் சமாளிப்பீர்கள், பயணங்கள் கைகூடும்.


விருச்சிகம்

உள்ளத்தில் உள்ளவர்களின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


கும்பம்

குடும்பத்தினர் உங்களின் சொற்களைக் கேட்டு நடப்பர், வியாபார விருத்தியுண்டு, சமூகப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும்.


மிதுனம்

பொது நல இடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.


கன்னி

வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், பணப்பற்றாக்குறை ஏற்படலாம், உடல் நலனில் க்வனம் தேவை


தனுசு

எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.


மீனம்

மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நிய மோகம், ஆடம்பரங்கள் வேண்டாம் உடனே தூக்கி எறி.

# யாழ்.மாநகர சபையின் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி, நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடமாடும் சேவை அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

வட்டாரம் 6 மற்றும் 18 ஆம் வட்டாரங்களிற்கான ஆதனவரி அறிவித்தல் படிவம்/ சோலை வரி வழங்கல் , பெயர்மாற்ற விண்ணப்பப்படிவம் வழங்கல், துவிச்சக்கரவண்டி உரிமம் வழங்கல் போன்ற சேவைகளை வழங்குவதுடன் பொது மக்களால் இதுவரை காலமும் செலுத்தாதுள்ள ஆதனவரி நிலுவைகள் மற்றும் நடப்பாண்டு ஆதனவரி, தண்ணீர் வரி போன்றவற்றை பெற்று யாழ்.மாநகர சபையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன் நடப்பாண்டின் ஆதனவரியினை முழுமையாக செலுத்தும் பட்சத்தில் இரண்டாம் மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டுக்கான ஆதனவரியின் 5% கழிவினைப் பெற்றுக்கொள்ள முடியும் என யாழ்.மாநகர முதல்வர் இ.ஆனல்ட் அறிவித்துள்ளார். (4)

# யாழ்.மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவராக அமைச்சர் டக்ளஸ்



(கரணவாய்)

யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவராக டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார். அதற்கான நியமனப் பத்திரத்தை நேற்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன உத்தியோகபூர்வமாக யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவிடம் கையளித்தார்.(4-6-60)

# 'புதியதொரு வீடு' நாடகம் ஞாயிறன்று மேடையேறுகிறது

(யாழ்ப்பாணம்)

ஈழத்தின் தலைசிறந்த கவிஞர்களில் ஒருவரான "மஹாகவி" என்ற புனைப் பெயரைக் கொண்டது.

உருத்திரமூர்த்தி யினால் 1969 இல் எழுதப்பட்ட "புதியதொரு வீடு" நாடகம் அதனை எழுதத் தூண்டிய அரங்கவியலாளர் அ.தாசீசியசினால் 1971 இல் முதன்முதலாகவும் அதனைத் தொடர்ந்து பல்வேறு காலகட்டங்களிலும் பல்வேறு நெறியாளர்களினாலும் நெறியாள்கை செய்யப்பட்டு மேடையேற்றப்பட்டு வந்துள்ளது.

கொழும்புத் திருமறைக் கலாமன்றத்தால் 1999 ஆம் ஆண்டு அ.பிரான்சிஸ் ஜெனத்தின் நெறியாள்கையில் மேடையேற்றப்பட்ட இந்நாடகம் நீண்டகால இடைவெளியின் பின்னர் யாழ்ப்பாண திருமறைக் கலாமன்றத்தால் மீண்டும் தயாரிக்கப்பட்டு கடந்த 2016 ஆம் 2017 ஆம் ஆண்டுகளில் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் மேடையேற்றப்பட்டது.

தற்போது 6 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் தயாரிக்கப்பட்டு நாளை மறுதினம் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள மன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் முற்பகல் 10.30 மணிக்கும் மாலை 4 மணிக்குமாக இரண்டு காட்சிகளாக மேடையேற்றப்படவுள்ளது.

மீனவக் குடும்பமொன்றினை மையப்படுத்தியதான கதைப்பொருளைக் கொண்டுள்ள "புதியதொரு வீடு" நாடகம் புயல் ஒன்றினூடாக சிதைவுறும் குடும்பமொன்றில் ஏற்படும் நெருக்கீடுகளும் அந்த நெருக்கிடுகளுக்கு தீர்வு காண முற்படும் போது எதிர்பாராது எழுகின்ற சவால்களை மானிடர்களாக நின்று எவ்வாறு எதிர்கொண்டு வாழ்வது என்ற முடிவினையும் கொண்டமைந்துள்ளது.

இந்நாடகம் க.பொ.த.(சா/த) நாடகமும் அரங்கியலும் பாடத்தினை பயிலும் மாணவர்களுக்கான பாடநூலாக இருப்பது குறிப்பிடத்தக்கது. (4-6)

# வருடாந்த பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண அரச சாரதிகள் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பொன்விழா மண்டபம், சாவகச்சேரி, நகராட்சி மன்றத்தில் தலைவர் சி.சந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் புதிய நிர்வாக சபைத் தெரிவும் சாரதிகளாக இருந்து பதவி உயர்வு பெற்றுச் சென்றவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளது.(4)

# பணிச்சிறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/இளையதம்பி இந்து வித்தியாலய அதிபர் திருமதி.சிவராணி நந்தகுமாரின் பணிச்சிறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பதில் அதிபர் திருமதி. சு.ஜெயரூபன் தலைமையில் இடம் பெறவுள்ளது. (4)

# புண்ணிய நாச்சி அம்மையார் நினைவு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை நடத்தும் புண்ணிய நாச்சி அம்மையார் நினைவு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு சைவ பரிபாலன சபை மண்டபத்தில் சைவ பரிபாலன சபைத் தலைவர் வி. ஸ்ரீசக்தி வேல் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிவபூமி அறக்கட்டளை தலைவர் கலாநிதி.ஆறு.திருமுருகன், இரா. திருஞானசம்பந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (4-6)

# ஆறுமுகநாவலர் நினைவு விழா


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையும் யாழ்.தமிழ்ச் சங்கமும் இணைந்து நடத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 200 ஆவது நினைவு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு சைவ பரிபாலன சபை மண்டபத்தில் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் இரா.செல்வவடிவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பேராசிரியர் ஏ.சண்முகதாஸ் தலைமையிலான கருத்தரங்கும் இடம் பெறவுள்ளது. (4-6)



தற்போதைய அரசியல் நிலவரம் குறித்தும் வட மாகாணத்தில் நிலைமை தொடர்பாகவும் ஐக்கிய தேசிய கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சருமான விஜயகலா மகேஸ்வரனை ஜப்பான் தூதரகத்தின் அரசியல் ஆலோசகர் கானா மொரிவகி நேற்று முன்தினம் புதன்கிழமை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். (படம்-சிவசாந்தன்.கஜிந்தன்)



கனடாவைச் சேர்ந்த மிட்லான்ட் மீடியா ஊழியர்களின் நிதிப் பங்களிப்பில் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் கண் பார்வையற்றவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க மிருசுவில் பகுதியில் பொதுக் கிணறு ஒன்று அமைத்து கண்பார்வை அற்றவர்களின் சங்கத் தலைவரின் மேற்பார்வையில் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டது.

# ஹெரோயின் வைத்திருந்தவரை காட்டிக் கொடுத்தது மோப்ப நாய்



(கரணவாய்)

துன்னாலை வேம்படி பகுதியில் 120 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவரை பொலிஸ் மோப்ப நாய் பிடித்துள்ளது.

நெல்லியடிப் பொலிஸார் நேற்று முன்தினம் புதன் கிழமை மோப்ப நாய் சகிதம் போதைப்பொருள் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அவர்கள் நெல்லியடி பேருந்து தரிப்பு நிலையம், முச்சக்கர வண்டி தரிப்பு நிலையம் ஆகியவற்றில் சோதனை நடவடிக்கை இடம் பெற்றபோதும் அப்பகுதியில் எவ்வித போதைப் பொருட்களும் மீட்கப்படவில்லை. துன்னாலை வேம்படிப் பகுதியில் சோதனை மேற்கொண்ட போதே ஹெரோயினுடன் குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.(4-6-60)



சாரணர் இயக்கதின் இளைஞர் சாரணிய பிரிவாக செயற்படும் திரி சாரணர் பிரிவில் வழங்கப்படுகின்ற உயரிய விருதான பேடன் பவல் விருது, 57 வருடங்களின் பின்னர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் திரிசாரணர்கள் இருவரிற்கு கிடைக்கப் பெற்றுள்ளது.
(படம்- சிவசாந்தன்.கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்பினால் சபையில் இருந்து வெளியேறினார் ஜனாதிபதி

(கொழும்பு)

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தேர்தலை நடத்தக் கோரி கடும் எதிர்ப்பு தெரிவித்து பாராளு மன்றில் போராட்டத்தை மேற் கொண்டதால் சபையில் இரு ந்து வெளியேறிச் சென்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க.

நேற்று வியாழக்கிமை இடம் பெற்ற அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் கீழான ஜனாதிபதியின் கட்டளை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தேர்தலை நடத்துவதற்கு தற் போது பணம் இல்லை என பல தடவைகள் தெரிவித்தார்.

இதனால் ஆத்திரமடைந்த ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி,விமல்,டலஸ் அணி உறுப்பினர்கள் ஜனாதி பதிக்கு எதிராக சபைக்குள் எதி ர்ப்பு பதாகைகளை ஏந்திக் கொண்டிருந்தனர்.

இறுதியில் ஜனாதிபதி தொடர்ந்து எதிர்க்கட்சி உறுப் பினர்களின் கருத்துக்கு இண க்கம் தெரிவிக்காமல் செயற் பட்டு வந்ததால் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபை நடுவில் வந்து ஆர்ப்பாட்டம் செய்ய வந்த போது, உடனடியாக ஜனாதிபதி சபையில் இருந்து வெளியேறிச் சென்றார். (நி)

# வரிக்கொள்கையில் எந்த மாற்றமும் ஏற்படாது - அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

தொழிற்சங்கங்கள் ஆர்ப்பாட்ட ங்களில் ஈடுபட்டாலும் அரசாங்கம் வரிக்கொள்கைகளில் மாற்றங்களை மேற்கொள்ளாது என இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் தனது புதிய வரிக் கொள்கையை மாற்ற வேண்டும் என தொழிற்சங்கங்களும் தொழில் சார் அமைப்புகளும் காலக்கெடு விதித்துள்ள நிலையிலேயே இது குறித்து கருத்து தெரிவித்துள்ள அமைச்சர் அரசாங்கம் தனது வரிக் கொள்கைகளில் எந்த மாற்றத்தினை யும் செய்யாது.

வரி தொடர்பான புதிய அறிவிப்பு களில் மாற்றங்களை மேற்கொள் ளும் நிலையில் அரசாங்கம் இல்லை.

வரிகளிற்கு எதிராக ஆர்ப்பாட்டங் களில் ஈடுபட்டுள்ள சிலர் வரிகளை செலுத்த வேண்டிய நிலையில் இல் லாதவர்கள்.

அவர்களின் வருமானம் 100,000 இற்கும் குறைவு. அவர்கள் அரசியல் நோக்கம் உடையவர்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

## மணிவிழா நாயகியை அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

25.02.2023



யா/இளையதம்பி இந்து வித்தியாலய அதிபர்

திருமதி. சிவராணி நந்தகுமார் அவர்கள்

(SLPS 2, B.Ed Sc, Sp. Trd Maths, Science)

அன்பின் இலக்கணமாய் ஆளுமையின் சிகரமாய்
முப்பத்து நான்கு ஆண்டுகள் சேவை
நல்லாசானாய் நல்லதிபராய்
எத்தனை களம் கண்ட நாயகி
கணித விஞ்ஞானத்தின் கலங்கரை விளக்கு
முகாமைத்துவத்தின் முதல்வியாய்
அளப்பரிய சேவை செய்த முதல்வர்
வழிநடத்தலில் உங்கள் வழி தனி
புன்சிரிப்பில் வழி சொல்லும் வித்தகி
மாண்பு மிக்கவர்களே மாணவர் என்றுரைத்து
பண்பாடு, கலாசாரம், விழுமியம் எனப்பல அன்புரைகள் விதைத்து
மாணவர்களை வழிப்படுத்தும் விதம் தனிச்சிறப்பு
அகவை அறுபதில் மணிவிழாக் காணும்
எமது அதிபரை அவர் தம் உறவுகளுடன்
என்றும் வளமாக வாழ உளமார வாழ்த்துகின்றோம்.

### சேவை விபரம்

| | |
|---|---|
| யா/மூளாய் அ.மி.த.க பாடசாலை | 1988.08.17 - 1992.05.31 |
| யா/சன்மார்க்க மகா வித்தியாலயம் | 1992.06.01 - 2001.01.14 |
| யா/காரைநகர் இந்துக் கல்லூரி | 2001.01.15 - 2001.09.03 |
| யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம் | 2001.09.04 - 2001.12.31 |
| யா/ சன்மார்க்க மகா வித்தியாலயம் | 2002.01.01 - 2004.09.14 |
| யா/ ஒஸ்மானியாக் கல்லூரி | 2004.09.15 - 2015.01.15 |
| யா/ கோண்டாவில் சி.சி.த.க பாடசாலை | 2015.01.16 - 2021.01.09 |
| யா/ இளையதம்பி இந்து வித்தியாலயம் | 2021.01.10 - 2023.02.24 |

வாழ்த்துவோர்: பாடசாலைச் சமூகம்,
யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்

(14686)

## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல் வலிகாமம் வடக்கு பிரதேச சபை உப அலுவலகம்-தெல்லிப்பழை

**விண்ணப்பதாரர் -மகாவேந்தன் மகாராஜா**
**முகவரி 174, மானிப்பாய் வீதி, உடுவில்.**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேசசபை, தெல்லிப்பழை உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம்-13 குருநாதர் சுவாமி கோயில் 1 ஆவது ஒழுங்கை இல 41/5இல் மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் என ஆதனப் பதிவேட்டில் உள்ளது.

குறித்த ஆதனமானது 2022 ஆம் ஆண்டு மாசி மாதம் 10, பிரசித்த நொத்தாரிஸ் செல்வி கிருஸ்ணவேணி சந்திரலிங்கம் முகதாவில் 5170 ஆம் இலக்கத்தில் 10.02.2022 ஆம் திகதியில் முடிந்த அறுதி உறுதிப்படி சண்முகநாதகுருக்கள் இரத்தினசபாபதிக்குருக்கள் ஆகியவர் மகாவேந்தன் மகாராஜாவிற்கு அறுதியளித்துள்ளனர். குறித்த உறுதியின்தாய் உறுதி 2021 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 07 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிஸ் செல்வி.கிருஸ்ணவேணி சந்திரலிங்கம் முகதாவில் 5043 ஆம் இலக்கத்தில் முடிந்த உறுதிப்படுத்தல் உறுதிப்படி சண்முகநாதக்குருக்களால் அவரின் தாய் வழியாக வந்த முதுசமென உறுதி முடித்துள்ளார்.

**ஆதன விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்கு பிரதேச சபை தெல்லிப்பழை தெல்லிப்பழை கோவிற்பற்று "தெல்லிப்பழை கிழக்கு இறையுமான கட்டு ஐயக்காரன் தோட்டம்" நிலப்பரப்பு 20 பரப்பு இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் ஆர்.சி.லோறன்ஸ்பிள்ளையால் அவர்கள் வரைந்த 2162/24.05.1980 ஆம் இலக்க வரைபடத்தின்படி துண்டு 01 ஆக காட்டப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்

**துண்டு 01**

கிழக்கு - 10 அடி அகல ஒழுங்கை
வடக்கு - 12 அடி அகல ஒழுங்கையும் சடையர் சீதேவனினதும் செல்லையா சிவப்பிரகாசத்தினதும், பூபதி இராசதுரையினதும் ஆதனங்கள்
மேற்கு - கணபதி கிருஸ்ணரினதும் பங்காளரினதும் ஆதனம்
தெற்கு - கனகலிங்கத்தினதும் பங்காளரினதும் ஆதனங்கள்

மேற்குறித்த ஆதனத்தை மகாவேந்தன் மகாராஜா எனும் பெயரில் பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர் மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சோமசுந்தரம் சுகிர்தன்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை. (கொல்லங்கலட்டி)**

(14700)

சிவமயம்

## யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை நடாத்தும் புண்ணியநாச்சி அம்மையார் நினைவு விழா

காலம் :- 26.02.2023 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் :- மாலை 3.00 மணி
இடம் :- சைவபரிபாலன சபை மண்டபம்

**தலைவர்**
திரு.வி.ஸ்ரீசக்திவேல்
(தலைவர்-சைவபரிபாலன சபை)

**வரவேற்புரை**
திரு.பொ.கமலநாதன்
(பரீட்சை செயலாளர்-சைவபரிபாலன சபை)

**சிறப்பு விருந்தினர்**
இராசையா திருஞானசம்பந்தன்
(கலாபூசணம், தேவார இசைமணி தாவடியூர்)

**வரவேற்பு நடனம்**
வண்ணக்கலை மன்றம்

**பிரதம விருந்தினர்**
கலாநிதி.ஆறு.திருமுருகன்
(தலைவர், சிவபூமி அறக்கட்டளை)

**"இந்துசாதனம் வெளியீடு"**
இரா.செல்வவடிவேல்
(செயலாளர், சைவபரிபாலன சபை)

**நன்றியுரை**
திரு.வி.தயாபரன்
(பொருளாளர்-சைவபரிபாலன சபை)

**பிற்பகல் 3 மணிக்கு கலாநிதி.ஆறு.திருமுருகன் அவர்களால் நாவலர் திருவுருவச் சிலை திறந்து வைக்கப்படவுள்ளது.**

அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சைவபரிபாலன சபை

(C-6037)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 111





அதோடு சக்கரவர்த்தியின் உடம்பு நலத்துக்கும் பழையாறையைக் காட்டிலும் தஞ்சாவூர் நல்லது என்று வைத்தியர்கள் சொன்னார்கள்.

"சுந்தர சோழரின் உடம்பைப் பற்றி எல்லாரும் சொல்லுகிறார்கள். ஆனால் என்ன நோய் என்று மட்டும் யாருக்கும் தெரிவதில்லை."

"தெரியாமல் என்ன? சக்கரவர்த்திக்குப் பக்கவாதம் வந்து இரண்டு கால்களும் சுவாதீனம் இல்லாமல் போய்விட்டன."

"அடடா! அதனால் அவரால் நடக்கவே முடிவதில்லையோ?"

"நடக்க முடியாது; யானை அல்லது குதிரை மீது ஏறவும் முடியாது; படுத்த படுக்கைதான். பல்லக்கில் ஏற்றி இடத்துக்கு இடம் கொண்டு போனால் தான் போகலாம் அதிலும் வேதனை அதிகம். ஆகையால் சக்கரவர்த்தி அரண்மனையை விட்டு வெளிக் கிளம்புவதே இல்லை. சில காலமாகச் சித்தம் அவ்வளவு சுவாதீனத்தில் இல்லையென்றும் சொல்கிறார்கள்."

"ஆஹா! என்ன பரிதாபம்!"

"பரிதாபம் என்று கூடச் சொல்லக் கூடாது, அண்ணா! அதுவும் ராஜ நிந்தனை என்று சொல்லிப் பழுவேட்டரையர்கள் தண்டனை விதிப்பார்கள்."

பழுவேட்டரையர்! பழுவேட்டரையர்! எங்கே, யாரிடம் பேசினாலும் பழுவேட்டரையர்களைப் பற்றியே பேச்சு! அவர்கள் எவ்வளவு பராக்கிரமசாலிகளாய் இருந்தால்தான் என்ன? தன பொக்கிஷம் தானியக் களஞ்சியம், தஞ்சை நகரக் காவல், ஒற்றர்படை எல்லாம் அவர்களுடைய வசத்தில் இருக்கும்படி சக்கரவர்த்தி விட்டிருக்கக் கூடாது. இவ்வளவு அதிகாரத்தையும் அவர்களிடம் விட்டதனால் அல்லவா சக்கரவர்த்திக்கு விரோதமாகச் சதி செய்யத் தொடங்கி விட்டார்கள்? இவர்களுடைய சதி எவ்வளவு தூரம் பலிக்குமோ? அது பலிக்காமல் போக நம்மால் இயன்ற பிரயத்தனம் செய்ய வேண்டும்.

சந்தர்ப்பம் கிடைத்தால் சக்கரவர்த்திக்கும் எச்சரிக்கை செய்து வைக்க வேண்டும்! இதற்குள் கோட்டை வாசல் வந்து விட்டது. சேந்தன் அமுதன் தனது புதிய நண்பனைப் பிரிந்து தளிக்குளத்தார் ஆலயத்தை நோக்கிச் சென்றான். வந்தியத்தேவனோ எத்தனையோ மனக்கோட்டைகளுடன் அந்தக் கோட்டை வாசலை நெருங்கினான்.

### இருபத்தைந்தாம் அத்தியாயம்
### கோட்டைக்குள்ளே

பனை இலச்சினை தாங்கிய மோதிரம் கதைகளில் வரும் மாய மோதிரத்தைப் போல் அபாரமான மந்திர சக்தி வாய்ந்ததாயிருந்தது. காலை நேரத்தில் பால், தயிர் விற்பவர்கள், பூக்கூடைக்காரர்கள், கறிகாய் விற்பவர்கள், பழக்கடைக்காரர்கள் மற்றும் பல தொழில்களையும் செய்வோர், கணக்கர்கள், உத்தியோகத்தர்கள் முதலியோர் ஏகக் கூட்டமாகக் கோட்டைக்குள் பிரவேசிக்க முயன்று கொண்டிருந்தார்கள்.

கோட்டைக் கதவின் திட்டிவாசலைத் திறந்து அவர்களை ஒவ்வொருவராக உள்ளே விடுவதிலே கோட்டை வாசற்காவலர்கள் தங்கள் படாடோப அதிகாரத்தைக் காண்பித்துக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் நம் இளம் வீரன் பனை இலச்சினை பொறித்த மோதிரத்தைக் காட்டியதுதான் தாமதம், காவலர்கள் மிக்க மரியாதை காட்டி, கோட்டைக் கதவுகளில் ஒன்றைத் திறந்து விட்டார்கள் வந்தியத்தேவனும் கோட்டைக்குள் பிரவேசித்தான்.

ஆகா! தஞ்சைபுரிக் கோட்டைக்குள் அவன் கால் வைத்த வேளை என்ன வேளையோ தெரியாது! அதிலிருந்து எத்தனை எத்தனை முக்கிய நிகழ்ச்சிகள் தொடர்ந்து வந்தன! சோழ சாம்ராஜ்யத்தின் சரித்திரத்திலேயே அது ஒரு முக்கிய சம்பவமாகவல்லவா ஏற்பட்டது! கோட்டைக்குள் பிரவேசித்துச் சிறிது நேரம் வரை வந்தியத்தேவன் ஒரே பிரமிப்பில் ஆழ்ந்திருந்தான்.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்

## திறமையான குள்ளன்



ஏழை விறகு வெட்டி ஒருவன் தன் மனைவியுடன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு ஏழு மகன்கள் இருந்தனர். அவன் எவ்வளவோ கடுமையாக உழைத்தும் அவர்கள் பல நாட்கள் பட்டினி கிடந்தார்கள்.

ஒரு நாள் இரவு அவனுடைய மகன்கள் தூங்கிக் கொண்டிருந்தனர்.

மனைவி அவனிடம், "நாம் எவ்வளவு காலம் துன்பப்படுவது? வயிறார உண்டு எத்தனை நாட்கள் ஆகிறது? நம் மகன்களைக் காட்டில் விட்டுவிட்டு வந்து விடுங்கள். இருப்பதைக் கொண்டு நாம் மகிழ்ச்சியாக வாழலாம்" என்றாள்.

"நீ சொன்னபடியே செய்கிறேன். நாளை அவர்களுக்கு உணவு சமைத்துவை" என்றான் அவன்.

கடைசி மகனான குள்ளன் அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

விடிகாலையில் எல்லோருக்கும் முன் எழுந்தான் அவன். ஆற்றங்கரைக்குச் சென்று அங்கிருந்த சிறுசிறு கூழாங்கற்களை எடுத்தான். சட்டைப் பை நிறைய அவற்றைப் போட்டுக் கொண்டான். வீடு திரும்பினான் அவன். தாயும் தந்தையும் அண்ணன்களும் அவனுக்காகக் காத்திருந்தனர்.

"ஏன் இவ்வளவு நேரம்? அம்மாவிடம் உன் பங்கு அடையை வாங்கிக் கொள். காட்டில் சாப்பிடலாம். இன்று நாம் எல்லோரும் விறகு வெட்டச் செல்கிறோம்" என்றான் விறகுவெட்டி.

எல்லோரும் மகிழ்ச்சியுடன் புறப்பட்டார்கள். கடைசியாகச் சென்றான் குள்ளன். தன் பையிலிருந்த கூழாங் கல்லை வழி எங்கும் போட்டுக் கொண்டே வந்தான்.

நீண்ட தூரம் நடந்து காட்டின் நடுப்பகுதிக்கு வந்தார்கள்.

"இனி என்ன முயன்றாலும் தன் மகன்களால் வீட்டை அடைய முடியாது. அவர்களை ஏமாற்றி விட்டுப் புறப்பட வேண்டும்" என்று நினைத்தான் அவன்.

"நீங்கள் விளையாடிக் கொண்டிருங்கள். நான் சிறிது தூரம் சென்று நல்ல மரமாகப் பார்த்து வெட்டுகிறேன். இருட்டியதும் வீட்டிற்குப் புறப்படலாம்" என்றான் அவன்.

அவர்களும் மகிழ்ச்சியாக விளையாடத் தொடங்கினார்கள்.

அருகில் இருந்த மரத்தில் ஒரு கட்டையைத் தொங்க விட்டான் அவன். காற்று அடிக்கும் போதெல்லாம் மரத்தில் அது மோதியது. விறகு வெட்டுவது போல ஓசை கேட்டது. மகன்களுக்குத் தெரியாமல் வீடு வந்து சேர்ந்தான் அவன்.

அவர்கள் நீண்ட நேரம் விளையாடிக் கொண்டு இருந்தார்கள். இருட்டத் தொடங்கியது.

"தந்தையை அழைத்துக் கொண்டு வீட்டிற்குச் செல்வோம்" என்றான் மூத்தவன்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ செய்யும் பாவமே உன்னைக் காட்டிக் கொடுத்துவிடும்.

– பைபிள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வீதிகளில் நெல்லை காயவிடுபவர்களுக்கு...

வீதி விபத்துப் பற்றி இவ்விடத்தில் பல தடவைகள் எழுதியாயிற்று.

அதிலும் தெருநாய்களால் ஏற்படுகின்ற வீதி விபத்துக் குறித்து இவ்விடத்தில் பிரஸ்தாபித்ததுடன், தெரு நாய்களைப் பிடித்து நாய்கள் காப்பகங்களில் விடுங்கள் எனப் பல தடவைகள் கேட்டாயிற்று.

இருந்தும் அது விடயத்தில் எமது உள்ளூராட்சி அமைப்புகள் இம்மியும் கருசனை காட்டவில்லை.

தெரு நாய்களால் நாளாந்தம் ஏற்படுகின்ற விபத்துக்களால் நம்மவர்கள் படுகாயமடைந்து மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுவதுடன் விபத்தின் தாக்கத்தால் இறந்து போகின்ற சம்பவங்களும் நடந்தாகின்றன.

சுருங்கக்கூறின் தெருநாய்கள் வீதிக்குக் குறுக்காக ஓடியதால் ஏற்பட்ட விபத்தில் உயிரிழுந்தவர்கள் பற்றிக் கணக்கெடுத்தால், எங்கள் உள்ளூராட்சி அமைப்புகளின் பலயீனங்கள் எத்தன்மையென்பது தெரியவரும்.

ஆம், தெருநாய்களைப் பிடித்து நாய்கள் காப்பகங்களில் ஒப்படைக்கின்ற பணியைச் செய்வதற்குக் கூட வக்கற்ற எங்கள் உள்ளூராட்சி அமைப்புகளால் நம் மண்ணில் ஏதேனும் அபிவிருத்தி ஏற்படும் என யாரேனும் நம்பினால் அதைவிட்ட மடமைத்தனம் வேறில்லை எனலாம்.

உண்மையில் எம் மக்களின் வாழ்வில் கருசனை இருந்தால் – விபத்தால் ஏற்படுகின்ற மரணங்களால் பல குடும்பங்கள் நிர்க்கதியாகியுள்ளன என்ற நினைப்பு இருந்தால், நிச்சயம் தெருநாய்களைக் கட்டுப்படுத்தும் செயற்றிட்டம் அமுலாகி இருக்கும்.

மாறாக எல்லாமும் அரசியல் என்றான போது, எல்லாம் நடிப்பும் நாடகமும் என்பது தான் உண்மையாயிற்று என்பதோடு அதனை ஒருபுறம் வைத்துக் கொள்ளலாம்.

மாறாகத் தற்போது நெல் அறுவடைக் காலம் என்பதால் அறுவடை செய்த நெல்லை வீதி ஓரங்களில் காயவிடுகின்ற நடைமுறை நம்மத்தியில் இருக்கின்றது.

பரவாயில்லை. அறுவடை செய்த நெல்லைக் காயவிடுவதற்கான மேடைகள் இல்லாதபோது, வீதி ஓரமாக நெல்லைக் காயவிடுவதில் தவறில்லை.

ஆனால், சிலர் காயவிட்ட நெல்லை மாலை வேளை குவியலாக்கிவிட, இராப்பொழுதில் வீதியால் பயணிப்பவர்கள் நெல் குவியலில் மோதுண்டு விபத்துக்குள்ளாகின்ற மிகப் பெரும் அபத்தம் நடந்தாகிறது.

தவிர, சில சந்தர்ப்பங்களில் உயிரிழப்புகளும் ஏற்பட்டுள்ளன.

ஆக, வீதிகளில் நெல்லைக் காயவிடுபவர்கள் அவற்றை வீதிகளில் குவியலாக்காமல் பார்த்துக் கொள்வது மிகவும் அவசியம்.

இல்லையேல் நெல் குவியல்களால் ஏற்படும் விபத்துக்களும் கடுமையான இழப்புக்களை ஏற்படுத்திவிடும். கவனம்.

# வாகன உதிரிப்பாகங்களின் விலை பன்மடங்கு அதிகரிப்பு

வாகன உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்வதற்கான கடனுதவியை வங்கிகள் வழங்க முடியாமையினாலும், டொலரின் பெறுமதி வீழ்ச்சியாலும் வாகன உதிரிப்பாகங்களின் விலை பல மடங்கு அதிகரித்துள்ளதாக கொழும்பு - பஞ்சிகாவத்த வாகன உதிரிப்பாக விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வாகன உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்வதற்கான கடனுதவி கிடைக்கப்பெறாததாலும், டொலரின் பெறுமதி வீழ்ச்சியாலும் வாகன உதிரிப்பாகங்களுக்கு பாரியளவில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் தயாரிக்கப்பட்ட வாகனங்களுக்கான உதிரிப்பாகங்களுக்கு அதிக தட்டுப்பாடு இல்லையென்றாலும், இங்கையில் அதிகளவில் பயன்படுத்தப்படும் ஜப்பானிய புதிய மற்றும் பழைய வாகனங்களின் உதிரிப்பாகங்களுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதுடன், அதன் விலையும் பாரியளவில் அதிகரித்துள்ளதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

சுமார் ஆறு மாதங்களுக்கு முன்பு 12,000 - 15,000 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்ட உதிரிப்பாகங்கள் தற்போது 45,000 - 50,000 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாக அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். (ம-7)

## இலங்கை – நெதர்லாந்து இருதரப்பு விமான சேவை ஒப்பந்தம் கைச்சாத்து

நெதர்லாந்துக்கும் இலங்கைக்கும் இடையில் இருதரப்பு விமான சேவை ஒப்பந்தம் நேற்று முன்தினம் ஹேக்கில் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக ஹேக்கில் உள்ள இலங்கைத் தூதரகம் அறிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் ஐரோப்பிய மற்றும் ஆசிய பிராந்தியங்களுக்கும் இடையிலான தொடர்பைத் தீவிரப்படுத்த இந்த ஒப்பந்தம் வலுவான தளத்தை வழங்கும் என்று தூதரகம் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

நெதர்லாந்துக்கான இலங்கையின் தூதுவர் அருணிரணராஜா மற்றும் நெதர்லாந்து உட்கட்டமைப்பு மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சின் சிவில் விமானப் போக்குவரத்துக்கான பதில் பணிப்பாளர் நாயகம் எச்.வான்பாசென் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். (ம-7)

## தேர்தல் தாமதிப்பதற்கு ஜனாதிபதியே பொறுப்பு டலஸ் அழகப்பெரும

உள்ளூராட்சிமன்ற தேர்தல் தாமதிப்பதற்கு ஜனாதிபதியே காரணம் என பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை உரையாற்றும் போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுவரை காலமும் உள்ளூராட்சிமன்ற தேர்தல் தாமதிப்பதற்கான குற்றச்சாட்டு, திறைசேரி செயலாளர் மற்றும் அரச அச்சகர் ஆகியோர் மீது சுமத்தப்பட்டிருந்தது எனவும் இன்று (நேற்று) ஜனாதிபதி பாராளுமன்றில் கூறிய கருத்துக்களில் இருந்து ஜனாதிபதியே இதற்கு பொறுப்பு என்பது தெரியவந்துள்ளதாக தெரிவித்துள்ளார். (ம-7)

## உலக பணவீக்க பட்டியல் இலங்கை சாதகமான முன்னேற்றப் பதிவு

ஜோன் ஹோப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் சர்வதேச பொருளாதார நிபுணர் ஸ்டீவ் ஹன்கின் வெளியிட்டுள்ள பணவீக்க தரப்படுத்தலில் இலங்கை சாதகமான முன்னேற்றத்தை பதிவுசெய்துள்ளது.

கடந்த 16 ஆம் திகதி வெளியிடப்பட்ட இந்த பணவீக்க தரப்படுத்தலின் பிரகாரம் இலங்கை 13 ஆவது இடத்தில் உள்ளது. ஹான்கேவின் கணிப்புகளின்படி, சில மாதங்களுக்கு முன்னர் உயர் பணவீக்கம் உள்ள முதல் 5 நாடுகளுக்குள் இலங்கையும் இடம்பெற்றிருந்தது.

கடந்த வருடம் ஜூன் மாத்தில் குறித்த தரப்படுத்தலில், உலகின் அதிக பணவீக்கம் கொண்ட நாடுகளின் பட்டியலில் இலங்கை இரண்டாவது இடத்தை பிடித்திருந்தது.

எவ்வாறாயினும், நாட்டில் பணவீக்கம் படிப்படியாக வீழ்ச்சியடைந்து வரும் நிலையில் இலங்கை குறித்த தர வரிசையில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைக் கண்டுள்ளது.

கடந்த ஆண்டின் டிசம்பர் மாதத்தில் வெளிடப்பட்ட இலங்கையின் நவம்பர் மாதத்துக்கான பணவீக்கம் 61 % ஆக பதிவாகியிருந்தது. எவ்வாறாயினும், அண்மையில், தொகை மதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையின் பிரகாரம் ஜனவரி மாதத்துக்கான பணவீக்கம் 54.2% ஆக குறைவடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## 3 ஆயிரம் கிலோகிராம் போதைப்பொருளை அழிக்க நடவடிக்கை

(கொழும்பு)

அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்திடம் 3,000 கிலோகிராம் எடையுடைய போதைப் பொருள் களஞ்சியத்தில் உள்ளதாக அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த போதைப் பொருளை எரித்து அழிப்பதற்கு சட்ட ரீதியாக புதிய முறையொன்று உருவாக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

மேலும், சர்வதேச நாடுகளிலிருந்து இலங்கைக்கு போதைப்பொருளை அனுப்பும் நபர்களுக்கு அதிகபட்ச தண்டனையை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ம-7)


## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ்.பிரதேசத்தில்** நெபாட் வலைத் தொழிற்சாலை, ஸ்ரீலங்கா ஐஸ் தொழிற்சாலை, ATI Gurunagar கடட திணைக்களம், சீனோர்-குருநகர், ஐஸ் தொழிற்சாலை-கடற்கரை வீதி, கடற்கரை வீதி-பழைய பூங்கா வீதி சந்தி, டேவிட் வீதி-கடற்கரை வீதி, குருநகர், குருநகர் கடற்கரை வீதி ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** 22 எஸ்.எல்.எல்.ஐ இராணுவ முகாம்-கணேசபுரம் (வெள்ளாங்குளம்) ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** அகத்திமோட்டை, அந்தோனியார்புரம், இலுப்பைக் கடவை, கள்ளியடி, கூறாய், கோவில்குளம், மூன்றாம்பிட்டி, முதலியார்குளம், பாலியாறு, சீது விநாயகங்குளம், தேத்தா வாடி, தேவன்பிட்டி, தேவன் நீர்வழுங்கல், வெள்ளாங்குளம், கணேசபுரம், விடத்தறதீவு-மருத்துவமனை, விடத்தற் தீவு - கிராமம் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** ஆவே மரியா ஐஸ் தொழிற்சாலை, கச்சேரி வளாகம், மன்னார் நீர் வழங்கல் சபை, இறால் பண்ணை-பள்ளமடு, மன்னார் தொலைத் தொடர்பு நிலையம், கார்கில்ஸ் பூட்சிட்டி-மன்னார், மன்னார் நகரம், கொன்வென்ட் வீதி, மூர் வீதி, பள்ளிமுனை, இளையோர் சேவை மையத்தடி, நெடுங்கண்டல் மொபிட்டல் கோபுரம், மன்னார் ஸ்ரீலங்கா டெலிகொம், புனித செபஸ்டியன் தேவாலயம், யு.சி மைதானம்-மன்னார் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடளாவிய ரீதியில் சுகாதார பணியாளர்கள் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம்





(யாழ்ப்பாணம்)

**பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் மருத்துவமனை சுகாதாரப் பணியாளர்கள் நேற்று வியாழக்கிழமை காலை மருத்துவமனை முன்றலில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர். அந்த வகையில் வடமாகாணத்தில் உள்ள மருத்துவ மனைகளிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.**

"மேலதிக நேரக் கொடுப்பனவை வரையறுக்கும் சுற்றறிக்கையை நீக்கல், வாரத்தில் ஐந்து நாட்களை மட்டுமே வேலை நாட்களாக பிரகடனப்படுத்தல், அதிகரித்துள்ள மின் கட்டணத்தை குறைத்தல், பொது நிர்வாக சுற்றறிக்கையின் படி அனைத்து சுகாதார ஊழியர்களுக்கும் விசேட விடுமுறை வழங்குதல், நியாயமற்ற வரிக் கொள்கையை ஒழித்தல், நியாயமற்ற ரீதியாக அதிகரித்த வட்டி வீதத்தைக் குறைத்தல், மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களின் பற்றாக் குறையை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டும்" உள்ளிட்ட ஒன்பது கோரிக்கைகளை முன்வைத்து மருத்துவமனை முன்றலில் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

காலை 8 மணி தொடக்கம் 12 மணி வரை சுகாதாரப் பணியாளர்களால் குறித்த கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(4-6-30-33-60-104-250-100-316)

## கைக்குழந்தையுடன் கஞ்சா கடத்தல் இளம் தாயார் கைது

(முல்லைத்தீவு)

கஞ்சா கடத்தலில் ஈடுபட்ட இளம் தாயாரொருவர் நேற்று முன்தினம் முல்லைத்தீவு சிலாவத்தைப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த இரகசிய தகவலைத் தொடர்ந்து, சிலாவத்தைப் பகுதியில் அமைந்துள்ள பேருந்து தரிப்பிடம் ஒன்றில் வைத்து குறித்த இளம்தாயார் தனது கைக்குழந்தையுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

முள்ளியவளைப் பகுதியைச் சேர்ந்த குறித்த இளம் தாயார், கிளிநொச்சியில் கஞ்சாவைப் பெற்று, கொக்கிளாய்க்கு கொண்டு செல்லவிருந்த நிலையிலேயே சிலாவத்தை பேருந்து தரிப்பிடத்தில் வைத்து அவரது கைக்குழந்தையுடன் கைது செய்யப்பட்டதாக முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இளம் தாயாரின் உடைமையிலிருந்து 100 கிராம் அளவிலான கஞ்சா கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (4-6)

## 400 போதை வில்லைகளுடன் வவுனியாவில் ஒருவர் கைது



(குருமன்காடு)

வவுனியாவில் போதையினை ஏற்படுத்தக்கூடிய மருந்துகளை விற்பனை செய்த ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளதுடன் அவரிடமிருந்து 400 மருந்து வில்லைகளையும் கைப்பற்றியுள்ளனர்.

போதையினை ஏற்படுத்தக்கூடிய மருந்து விற்பனை செய்வதாக போதை தடுப்பு மற்றும் ஊழல் ஒழிப்பு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் வவுனியா பொலிஸார் அடங்கிய குழுவினர் திருநாவற்குளம் பகுதியில் குறித்த நபர்களை மறித்து சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன் போது அவரின் உடைமையிலிருந்து 400 போதை மருந்து வில்லைகளை கைப்பற்றியுடன் குறித்த மருந்தினை வைத்திருந்த 23 வயதுடைய இளைஞனை பொலிஸார் கைது செய்தனர்.

சந்தேகநபரை வவுனியா மாவட்ட நீதவான்நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (4-6-250)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 300 | 280 | 320 |
| உருளைக்கிழங்கு | 150 | 160 | 150 | 150 |
| பச்சைமிளகாய் | 250 | 300 | 280 | 300 |
| தக்காளி | 100 | 140 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 180 | 240 |
| கோவா | 80 | 90 | 100 | 100 |
| கரட் | 120 | 170 | 200 | 250 |
| பூசணி | 80 | 80 | 80 | 80 |
| புடோல் | 200 | 220 | 150 | 200 |
| வாழைக்காய் | 120 | 180 | 120 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 150 | 150 | 130 | 150 |
| பாகற்காய் | 400 | 500 | 500 | 600 |
| வெண்டக்காய் | 350 | 400 | 250 | 400 |
| கருணைக் கிழங்கு | 100 | 90 | 80 | 120 |
| பயற்றங்காய் | 400 | 50 | 400 | 400 |
| லீக்ஸ் | 260 | 280 | 250 | 300 |
| பீற்றூட் | 200 | 200 | 200 | 250 |
| கறிமிளகாய் | 650 | 500 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 1500 | 1600 | 1200 | 1800 |
| போஞ்சி | 350 | 300 | 350 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | 200 | 200 | 300 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 70 | 150 |
| தேசிக்காய் | 200 | 150 | 140 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 90 | 80-120 |
| இராசவள்ளி | 250 | 250 | 280 | 350 |
| வெங்காயப்பூ | 100 | 120 | 150 | 250 |
| முள்ளங்கி | 50 | 70 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 80 | 60 |
| வல்லாரை | 50 | 25 | 50 | 50 |
| ஈரப்பலா | 100 | 120 | 100 | 100 |

## வவுனியா அபிவிருத்திக்குழு தலைவராக மீண்டும் திலீபன்



(நெளுக்குளம்)

வவுனியா மாவட்ட அபிவிருத்தி குழு தலைவராக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கு அமைவாகவே அவருக்கு இப்பதவி வழங்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி கையொப்பமிட்ட நியமனக் கடிதத்தை பிரதமர் தினேஷ் குணவர்த்தனவிடமிருந்து திலீபன் எம்.பி நேற்று பெற்றுக் கொண்டார். (4-6-299)

## பகிரங்க ஏலவிற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் இன்று காலை 9 மணிக்கு பிளாஸ்ரிக் கான், போத்தல், பரல் ஏலவிற்பனை நடைபெறவுள்ளது.

ஏலவிற்பனைக்கான பிளாஸ்ரிக் கான் , போத்தல், பரல் போன்றவற்றினை ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணித்தியாலயம் முன்பாக பதிவாளரின் அனுமதியுடன் பார்வையிடலாம்.

அத்துடன் ஏலவிற்பனையில் பங்குபற்றுபவர்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றுதல் மிகவும் முக்கியமானதாகும் என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாக்கல் செய்த...

வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது வழக்கு மீதான அடுத்த விசாரணை மே 11 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தேர்தலைப் பிற்போடும் நீதிப் பேராணையை தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு பிறப்பிக்குமாறு கோரியே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.(ம-7)

## தேர்தல் ஆணைக்...

தேர்தலை நடத்த தன்னால் முடிந்த நிதியுதவி எனக் கூறி பணத்தை அனுப்பியுள்ளார்.

யாழ்ப்பாணம் சுண்டுக்குளி பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர், "தேர்தலை நடத்தி ஜனநாயகத்தை நிலைநாட்டுவோம், சிறு துளி பெரு வெள்ளம்" என தபாலகம் ஊடாக 500 ரூபாய் காசுக்கட்டளையை தேர்தல் ஆணையகத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். (ம-7,33,104)

## நம்பகமான...

ஜி20 குழுவின் நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்கள் பங்கேற்ற மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் சந்தைகளிற்கான அர்த்தபூர்வமான கடன் நடவடிக்கைகளில், சீனா உட்பட அனைத்து கடன் கொடுப்பனவு நாடுகளும் கலந்துகொள்ள வேண்டும் என அமெரிக்கா தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்கும் எனவும் அவர் கூறினார்.

பல. நாடுகளின் முன்னோக்கிய வளர்ச்சியை தடுத்துவைத்துள்ள கடன் நெருக்கடிக்கு தீர்வைக் காண்பதற்கு இணைந்து பணியாற்றுவது அவசியம் எனவும் அவர் குறிப்பிட்டார். (ம-7)

## கல்வி அமைச்...

பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய இணைப்பாளர் வசந்த முதலிகே உள்ளிட்ட 57 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காலவரையறையின்றி மூடப்பட்டுள்ள ஹோமாகம பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்தை, திறக்குமாறு வலியுறுத்தி, அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் நேற்று பிற்பகல் கல்வி அமைச்சுக்கு சென்றனர்.

இதன்போது, கல்வி அமைச்சின் வளாகத்தில், அமைதியற்ற நிலை ஏற்பட்டதையடுத்து, 57 பேர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

## ஆவணத்தில்...

டனையைநிறைவேற்றுவதற்கு கையொப்பமிடுவதில்லை என ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாக சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

போதைப்பொருள் குற்றச்சாட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்ட நான்கு பிரதிவாதிகளுக்கு 2019ஆம் ஆண்டு மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கு கையொப்பமிடுவதற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எடுத்த தீர்மானத்தை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நெரின் புல்லே இதனை அறிவித்திருந்தார். (ம-7)

## பிரபாகரனை...

கள் என பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன், நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவிற்கு ஆவேசமாக கூறியுள்ளார்.

பாராளுமன்றில் நேற்று கருத்து தெரிவிக்கும்போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

"தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் 30 ஆண்டுகள் இளைஞர்களை பலவந்தமாக யுத்தத்தில் ஈடுபடுத்திக் கொண்டு வடக்கு, கிழக்கில் வாழ்வாதாரத்திற்கு தேவையான அனைத்தையும் அழித்தார்" என நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

இதற்கு பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் பதிலளிக்கையில், அமைச்சரே நீங்கள் இப்போதும் விடுதலைப் புலிகளின் தலைவரை மறக்கவில்லை. நாங்களும் மறக்க மாட்டோம்.

வாழ்க்கை முழுவதும் மறக்க மாட்டோம். நீங்களும் மறக்க முடியாது ஏனென்றால் அவ்வளவு நேர்மையான, கண்ணியமிக்க [illegible] அவர் என குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொய்யான தகவல்களை தயவு செய்து இந்த இடங்களிலே நீங்கள் பரப்ப வேண்டாம். நீங்கள் ஒரு அமைச்சர். இனவாதத்தை கொட்ட வேண்டாம். யுத்தம் முடிந்து 13 வருடங்கள் முடிந்துவிட்டன.

இந்த நாட்டில் இப்போது என்ன நடக்கிறது? இப்போதும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனையா சொல்லப் போகின்றீர்கள்? தயவு செய்து சிந்தியுங்கள். படித்தவர் நீங்கள். முட்டாள்களாக இருக்காதீர்கள் என கோபத்தை வெளிப்படுத்தியுள்ளார். (ம-7)

## ஜனநாயகத்தை...

மானிப்பாய் பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி பைத்தியக்காரத்தனமாக பேசுகிறார். தேர்தலே இல்லை என அறிவித்து பைத்தியம் பிடித்தவர் போல் நடந்து கொள்கிறார். தேர்தல் இல்லை என்றால், இல்லாத தேர்தலுக்கு ஐக்கிய தேசியக் கட்சி வேட்பு மனு தாக்கல் செய்தது எவ்வாறு என தாம் கேள்வி எழுப்புவதாகவும் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

வேட்புமனு தாக்கல் செய்யும் திகதியும் அறிவிக்கப்பட்டு, தேர்தலை நடத்தும் திகதியும் தீர்மானிக்கப்பட்டதன் பின்னர் ஜனாதிபதி பைத்தியக்காரத்தனமாக பேசி கிறுக்குத்தனமாக நடந்து கொள்கிறார் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இந்நாட்டில் ஜனநாயகத்தை சீர்குலைத்து தேர்தலை நிறுத்துவதற்கு பிரதான சூத்திரதாரியாக செயல்பட்டவர் வேறு யாருமல்ல, ஜனாதிபதியே எனத் தெரிவித்தார். (ம-7)

## தேர்...

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல்கள் ஆணைக்குழு, சட்ட ரீதியாக தேர்தலுக்கு அழைப்பு விடுக்கவில்லை.

தேர்தலை நடத்துவதற்கு போதுமான நிதி அரசிடம் இல்லை என ஜனாதிபதி ரணில் தெரிவித்துள்ளார். (ம-7)

(மற்றொரு செய்தி உள்ளே)

## உள்ளூராட்சி...

தும் இணக்கப்பாட்டுடன்தான் தேர்தல் அறிவிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிதி வழங்கப்படாத பின்புலத்தில், தற்போது அறிவிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான இறுதி தீர்மானத்தை மேற்கொள்வதற்காக தேர்தல்கள் ஆணைக்குழு இன்று கூடவுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா கூறியுள்ளார்.

நாட்டின் தேசிய தேர்தல் ஆணைக்குழு சட்டபூர்வமாக தேர்தலுக்கு அழைப்பு விடுக்கவில்லை என்றும், தேர்தலை நடத்த நிதி இல்லை என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்ததையடுத்து, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா இந்த விடயத்தை தெரிவித்துள்ளார். (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 23/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1495
மேஷம் 6 1 7 5 4 8

தன நிதானய
திகதி 2023.02.23
சீட்டிழுப்பு இலக்கம் 1070
M 04 33 38 71

கொவிசெத
திகதி 2023.02.23
சீட்டிழுப்பு இலக்கம் 3282
N 05 26 28 44

மெகா பவர்
திகதி 23/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1388
P 19 02 28 33 63

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.02.23
சீட்டிழுப்பு இலக்கம் 349
விருச்சிகம் 14 16 29 40 விருச்சிகம்

மஹஜன சம்பத
திகதி 2023/02/23
சீட்டிழுப்பு இலக்கம் 5040
S 6 3 5 1 7 9

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2015
நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.02.23
தினம் வியாழக்கிழமை
Z 14 41 44 68
ரூ. 3,491,800/-

சனிதா
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.02.23
சீட்டிழுப்பு இல: 4176
வர்ணம் : சிவப்பு
ரூ. 4,193,040/-
05 12 20 34 D

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,797,216/-
திகதி 2023-02-23
வெற்றி வாரம் 3727
வர்ணம் கபிலம்
31 45 48 53
4725
361
ரூ. 10,921,700/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
G 39 15 18 43 74
1191
செம்மஞ்சள்
2023.02.23
வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 308,312,644.20

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 573
திகதி 2023-02-23
வர்ணம் நீலம்
D 17 57 64 07
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 17,346,404/-
DLB DEVELOPMENT LOTTERIES
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அதகோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1841
சீட்டிழுப்பு திகதி: 2023.02.23
ரூ. 4,513,840/-
25 74 75 77 R


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விற்பனை அறிவித்தல்**

பிறிட்ஸ் உட்பட பலசரக் குக்கடை சாமான்கள் தள பாடங்கள் அனைத்தும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு

**077 049 1513**

(14701)


# இலங்கைக்கான...

சர்வதேச நாணய நிதி யத்தின் ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் தலை வர் கிரிஷ்ணா சீனி வாசன் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடன் பெறுவதற்கான நிதிக் குழுவின் ஒப்பு தலைப் பெற இலங் கைக்கு சிறந்த வழி சீனா உட்பட இருதரப்பு கடன் வழங்குநர்களிடமிருந்து நிதி உத்தரவாதங்களைப் பெறுவ தாகும் என அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

சீனாவின் நிதி உத்தரவாதம் இல்லாவிட்டாலும், சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு கடன் தொகையை வழங்க பரிசீலித்து வருவதாக ஏற் கனவே தகவல்கள் வெளியாகி இருந்தன.

எனினும் இந்தத் தகவல் களை மறுத்த சீனிவாசன், சீனாவின் உத்தர வாதத்தை இலங்கை பெறுவது மிகவும் முக்கியமானது எனவும் தெரிவித்துள்ளார். (ம-7)

# அரச அதிகாரிகளும்...

கப்பட்டுள்ளது.

இதன்படி, பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதியரசர்கள், மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் மற்றும் மேன் முறை யீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் தவிர்ந்த ஏனைய அதிகாரிகள் சாதாரண வகுப்பு விமான பயணச் சீட்டுக்களை மாத்திரமே கொள்வனவு செய்ய வேண்டும் என ஜனாதிபதி அறிவித்துள் ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி யின் செயலாளர் சமன் ஏக்க நாயக்கவினால் கையொப்ப மிடப்பட்ட சுற்றறிக்கை, பிரத மரின் செயலாளர், அமைச் சரவை செயலாளர் மற்றும் அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள், அனைத்து மாகாண பிரதம செயலாளர்கள் மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம-7)

# அடித்துப் படுகொலை

(கொழும்பு)

ஹெட்டிபொல - மட இன்ன பிரதேசத்தில் பெண்ணொருவர் தனது கணவனை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித் துள்ளனர். குடும்ப தகராறு காரணமாக இந்த கொலை நடந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

48 வயதான எம்.எம். வசந்த பெர்னாண்டோ என்ற மூன்று பிள்ளை களின் தந்தையே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலையுண்ட வரின் மனைவி சந் தேகத்தின் பேரில், ஹெட்டிபொல பொலி ஸாரால் கைது செய் யப்பட்டுள்ளார். (ம-7)


**புதிய பிரிவுகள் ஆரம்பம் 25.02.2023**

**வங்கியியல் கற்கைநெறிகள்**
**Banking Courses**
**IABF & DABF**
(Tamil & English Medium)
Qualification:- G.C.E O/L 6 Passes with 5 Credits including Maths.

**கணக்காளர் கற்கைநெறிகள்**
**Chartered Accounting Courses**
Business level - I, II
(Tamil & English Medium)
Qualification:- G.C.E A/L 3 Passes.

**தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு**
**aat (Sri Lanka)**
**AA1, AA2, AA3)**
Qualification:- G.C.E O/L 6 Passes
Medium - Tamil & English

**G.C.E A/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்**

**Certificate Course in English**
21 Batches have successfully Completed the Course

Further Details: **Jaffna College**
Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
021 222 3382, 021 222 9149
077 440 5917
(C-6039)



**குத்தகைக்கு தேவை**

வான்கள் / கார்கள் குத்த கைக்கு தேவை

**077 971 5379**

(14707)



**IELTS வகுப்புகள்**

- ஒரு பிரிவில் 5 பேர் மட்டுமே
- அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்கள்
- எம்மிடம் பயின்று 6 புள்ளி களுக்கு மேல் பெற்றுக்கொள்ளா விடின் 100% பணம் மீளளிக் கப்படும்.

**071 071 6979**

Winstar Consultants Pvt Ltd

(14704)



அரச சேவை பட்டதாரிகளிலிருந்து

**ஆசிரிய சேவைக்கு உள்ளீர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை வகுப்பு**

பொது உளச்சார்பு, கல்விப் பொதுஅறிவு
**தவசேகர், கமலதாசன்** மற்றும் துறைசார் வளவாளர்கள்

சனி (25/2), ஞாயிறு(26/2) : 9.00 am-2.30pm

**யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு**
(யாழ். ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கியருகில்)
T.P : 076 688 3394, 021 222 3382

(C-6044)



**O/L Paper Class**
**-2022-**
(துரித மீட்டல் வினா விடை வகுப்பு)

G.C.E O/L பரீட்சையில் அதி விசேட சித்திகளை பெற்றுக்கொள்வதற்கு நுட்பமான மீட்டல் வினா விடை வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
(தமிழ்/ கணிதம்/ விஞ்ஞானம்/ வரலாறு)

சனி, ஞாயிறு } 1.30 pm - 5.45 pm வரை
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

புதிய நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி. யாழ்ப்பாணம்
**077 459 8440**

(14708)



**முதலாம் ஆண்டு நினைவுதின அழைப்பு**



பிறப்பு 04 . 10 . 1942

இறப்பு 07 . 03 . 2022

கடந்த 07.03.2022 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்

உயர்திரு. **விஸ்வநாதர் குருநாதன்**

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுநாள் மாசி மாதம் 12 ஆம் நாள் (24.02.2023) இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை யிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

நன்றி

இங்ஙனம்
மனைவி : 021 222 6711
சிவகுரு ஆதீனம் : 021 222 0103

இல.692, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

(14694)



CHOLA FOODS CHOLA INTERNATIONAL (P) LTD
CIMS COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS

**CHOLA FOODS & CIMS COLLEGE**

SCHOLARSHIPS முற்றிலும் இலவச Hotel Management கற்கை நெறிகள்

வேலை செய்துகொண்டே படிக்கும் வாய்ப்பு



- FOOD & BEVERAGE
- COOKERY
- HOUSE KEEPING
- FRONT OFFICE
- DIPLOMA IN HOTEL MANAGMENT

போன்ற மேலும் பல கற்கைநெறிகள்
(கற்கைநெறி முடிவில் NVQ சான்றிதழ் வழங்கப்படும்)

- ✓ படிக்கும்போதே 25'000/= சம்பளத்துடனான வேலைவாய்ப்புக்கள்
- ✓ தங்குமிடம், உணவு வழங்கப்படும்
- ✓ வசதிகளற்ற மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
- ✓ வயதெல்லை 16 தொடக்கம் 25 வரை
- ✓ இருபாலரும் விண்ணப்பிக்கலாம்

→ மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் ←

நிர்வாகத்தின் தெரிவே இறுதியானது

**0777-068-777** (C-6042)



**உடனடி வேலை வாய்ப்பு**

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மாவிட்டபுரம்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-6041)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
**சம்பளம் - 30'000/-**
பயிற்சியின்போது - 25'000/-
**0777-068-777**
v2vacancies@gmail.com



**சுய தொழில்வாய்ப்பு - நிறைந்த வருமானம்**

V2 TRAVELS CHOLA FOODS CHOLA INTERNATIONAL (P) LTD உடன் இணைந்து



புதிதாக ஆரம்பிக்கும் உணவுப்பொதிகள் விநியோகத்தில் உங்கள் பிரதேசத்திற்கான உணவுப்பொதிகள் விநியோகதாரராக நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்

பகுதிநேரமாக மாதம் 50'000/= மேல் சம்பாதிக்கலாம்

(இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

ஆட்டோ/ மோட்டார் சைக்கிள்/சைக்கிள் வைத்திருத்தல் அவசியம்

யாழ் மாவட்டத்தில் எப்பகுதியில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

**V2 TRAVELS 0777-068-777**

(C-6041)



சங்கானை, தொட்டிலடி சந்தியில் கோலாகலமாக திறக்கப்பட்டுள்ளது

**வரன் ரெஸ்ட்**
**Waran Rest**



சகலவிதமான உணவுகளையும் உண்டு மகிழலாம்.
குடும்பத்தாருடன் உண்டு மகிழ்வதற்கு Family Room உண்டு,
மற்றும் Soft Liguor உண்டு, Take Away உம் உண்டு

**வரன் ரெஸ்ட்** வல்லை வீதி, தொட்டிலடி சந்தி, சங்கானை.
தொலை பேசி :- 077 277 9882 / 021 225 5657
இலங்கை சுற்றுலாத்துறையின் அனுமதி பெற்ற **Resturant**

(14705)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.